ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1826/1 - 2013 සැප්තැම්බර් මස 02 වැනි සඳුදා - 2013.09.02
*1826/1 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**தெங்கு வளர்த்தல் தொழில்**

*தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு வாயிலாகத் தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

வி. பீ. பீ. கே. வீரசிங்க,
*தலைவர்,*
தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபை.

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 5,*
*2013, ஓகத்து 16.*

**அட்டவணை**

*தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9971 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 1747/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், பின்வருமாறு மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

*(1) அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் வேலையாட்களுக்கு ஏற்புடையதான துண்டுவேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் பின்வருமாறமைதல் வேண்டும்:-*

| | நடைமுறை | | வீதம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|
| (I) | பெருந்தோட்டப் பயிர்களை வளர்ப்பதிலும் பேணுவதிலும், தேங்காய்களைப் பறித்தல் | - | 1000 மரங்களுக்கு | 1,655.00 |
| (II) | கொப்பறாவை உற்பத்தி செய்வதில் தேங்காய்களை உரித்தல், உடைத்தல், கொப்பறா பதனிடலும் வேறாக்கலும் | - | 1000 தேங்காய்களுக்கு | 485.00 |

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கவனிக்க.**- *1825/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1825/40 ஆகும்.*



2 - G 18190

பகுதி III

(2) நடைமுறை:

(அ) தெங்குப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினை வளர்த்தலும் பேணுதலும்.
(ஆ) கொப்பறாவினை உற்பத்தி செய்தல்.

மேற்படி நடைமுறைக்கேற்ப நேரவேலைக்கான ஆட்களுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறமைய வேண்டும்.

அனைத்து வேலையாட்களுக்கும் - நாளொன்றிற்கு 415.00

சாதாரண வேலை நாளொன்றில் அத்தகைய வேலைக்காக வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட ஆகக்குறைந்த சம்பள வீதத்தில் ஒன்றரை மடங்கு, ஞாயிற்றுக்கிழமையில் கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தத் தொழிலாளிக்காயினும் இப் பகுதியில் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறுபடாத வகையில் வழங்கப்படுதல் வேண்டும்.

பகுதி III 'அ'

(3) (அ) நடத்துநர் ஒருவரின் வேலைக்கு
(ஆ) காவலாளி ஒருவரின் வேலைக்கு

உரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்:

| | ஏக்கர் அளவு | - | காவலாளி | நடத்துநர் |
|---|---|---|---|---|
| | | | ரூபா சதம் | ரூபா சதம் |
| (1) | பரப்பளவில்10 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 25 ஏக்கருக்குக் குறைந்த தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு. | - | 9,520.00 | ஏற்புடையதன்று |
| (2) | பரப்பளவில் 25 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 50 ஏக்கருக்குக் குறைந்த ஏதேனும் தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு. | - | 9,935.00 | 10,210.00 |
| (3) | பரப்பளவில் 50 ஏக்கருக்குக் கூடிய தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு. | - | 11,385.00 | 11,660.00 |

09-356/1

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### பூக்கள், அழகு தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர்செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலுக்கான சம்பளச் சபை

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பூக்கள், அழகுக்கான தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர்செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பீ. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
பூக்கள், அழகுக்கான தாவரங்கள், மரக்கறிகள்
மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர்செய்வதற்கும்
ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2013, ஒகத்து 23.

**அட்டவணை**

பூக்கள், அழகுக்கான தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை பயிர்செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆந் திகதிய 1748/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டவையுமான முடிபுகளை, மேலுள்ள சம்பளச் சபையானது கீழுள்ள பகுதி I இல் குறிப்பிட்ட வேலையாட்கள் வகைக்குரிய பகுதி II இல் உள்ள ஆகக் குறைந்த சம்பள வீதங்களுக்கான தீர்மானங்களை இட உத்தேசிக்கின்றது.

பகுதி I

*தேர்ச்சியுடையோர்:*

இழையம் மற்றும் விதைகளை வளர்ப்பவர்கள், தாவரப்பகுதிகளை வெட்டி ஒட்டும் வேலைகளில் ஈடுபடுவோர், பூத்தாவரங்கள், பூக்கள், கிளைகள் என்பவற்றை ஏற்றுமதி செய்வதற்காகவும் விற்பதற்காகவும் ஒழுங்குபடுத்துபவர்கள், அழகுத்தாவரங்களையும், தாவரப்பகுதிகளையும் ஒழுங்குபடுத்துபவர்கள், தரக்கட்டுப்பாட்டாளர்கள், பூஞ்சணக்கொல்லிகள், பூச்சிகொல்லிகள், பசளைகள் என்பவற்றை விசிறுபவர்கள், பொதியிடுவோர்கள், களஞ்சியக்காப்பாளர்கள், வேலையாட்களுக்குப் பொறுப்பான நிர்வாக ஆண்கள், பயிற்சி தேவைப்படும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர்.

*ஓரளவு தேர்ச்சியுள்ளோர்:*

நாற்று மேடைகளை அமைப்பதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், இளம் நாற்றுக்களை நாட்டுபவர்களும், பராமரிப்பவர்களும், உற்பத்திகளை அறுவடைசெய்பவர்களும், சேகரிப்பவர்களும், களஞ்சிய உதவியாளர்கள் மற்றும் ஓரளவு தேர்ச்சியடைந்த வேறு வேலையாட்கள்.

*தேர்ச்சியற்றோர்:*

நிலங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், ஏற்றி, இறக்கும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள், பயிற்சி தேவைப்படாத செயற்பாடுகளில் ஈடுபடும் வேலையாட்கள்.

பகுதி II

வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதங்கள்

| | நாளாந்தம் ரூ. ச. | மாதாந்தம் ரூ. ச. |
|---|---|---|
| தேர்ச்சியுடையோர் | 565. 00 | 14,125. 00 |
| ஓரளவு தேர்ச்சியுள்ளோர் | 515. 00 | 12,875. 00 |
| தேர்ச்சியற்றோர் | 465. 00 | 11,625.00 |

09-356/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.